ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## ஸ்ரீமந் நாதமுனிகள் - வருஷ திருநட்சத்திரம் - ஆனி – அனுஷம்



ஸ்ரீமந் நாதமுனிகள் - காட்டுமன்னார்கோயில் - அவதாரஸ்தலம்
புகைபட உதவி - ஸ்ரீ ஸ்ரீவத்ஸ கிருஷ்ணன், திருவல்லிக்கேணி

### தனியன்

ஜ்யேஷ்டாமாஸே த்வநூராதே ஜாதம் நாதமுநிம் பஜே/
ய: ஸ்ரீஸடாரே: ஸ்ருதவாந் ப்ரபந்தமகிலம் குரோ: //

நமோSசிந்த்யாத் புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்யராஸயே /
நாதாய முநயேSகாத பகவத் பக்தி ஸிந்தவே //

## வாழித்திருநாமம்

ஆனி தனில் அனுடத்தில் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார்க்கு உபதேசம் அருளி வைத்தான் வாழியே
பானு தெற்கில் கண்டவன் சொல் பல உரைத்தான் வாழியே
பராங்குசனார் சொல் பிரபந்தம் பரிந்து கற்றான் வாழியே
கானமுறத் தாளத்தில் கண்டிசைத்தான் வாழியே
கருணையினால் உபதேசக் கதி அளித்தான் வாழியே
நானிலத்தில் குருவரையை நாட்டினான் வாழியே
நலம் திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே.

திருநாமங்கள் - ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீரங்க நாதமுனிகள், நாதப்ரஹ்மர்
திருக்குமாரர் - ஈஸ்வரமுனிகள்
ஆசாரியர் - நம்மாழ்வார்
புருஷாகாரார் - மதுரகவியாழ்வார்
சிஷ்யர்கள் - உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், பிள்ளைகருணாகரதாஸர்,
நம்பிகருணாகரதாஸர், ஏறுதிருவுடையார், திமக்கண்ணமங்கையாண்டான்,
வானமாமலை தெய்வநாயக ஆண்டான், உருப்புட்டுராச்சான்பிள்ளை,
சோகத்துராழ்வான், கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான்

அருளிச்செய்த ப்ரபந்தங்கள் - ந்யாயதத்வமென்கிற ஸாஸ்த்ரமும்,
யோகரஹஸ்யமும், புருஷநிர்ணயமும்

## ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்துள்ள கண்ணிநுன் சிறுத்தாம்பு தனியன்கள்

அவிதிதவிஷயாந்தரஸ்ஸஷடாரே
ருபநிஷதாமுபகாநமாத்ரபோக: /
அபி ச குணவஸாத்ததேகஸேஷீ
மதுரகவிர்ஹ்ருதயே மமாவிரஸ்து //

வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர். - ஏறு எங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார். எம்மை
ஆள்வார் அவரோ அரண்.

## ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச்செய்துள்ள திருவாய்மொழித் தனியன்

பக்தாம்ருதம் விஸ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீஸடகோபவாங்மயம் /
ஸஹஸ்ரஸாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம்த்ராவிடவேதஸாகரம் //

**பெரியாழ்வார் விஷயமாக ஸ்ரீமந் நாதமுனிகள் அருளியுள்ள தனியன்**

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநஸேஷாத்
நரபதிபரிக்லுப்தம் ஸுல்கமாதாதுகாம: /
ஸ்வஸுரமமரவந்த்யம் ரங்கநாதஜ்யஸாசஷாத்
த்விஜகுவதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி //

**ஸ்ரீமந்நாதமுனிகளை போற்றியுரைக்கும் இராமநுஜநூற்றந்தாதி - 20ஆம் பாசுரம்**

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான். அமுதத்திருவாய்
ஈரத் தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு. இனியவர்தம்
சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப் பருகும். இராமானுச னென்றன் மாநிதியே.

**ஸ்ரீமந்நாதமுனிகளை போற்றி ஸ்ரீ ஆளவந்தார் அருளியுள்ள ஸ்தோர்ரரத்தனத்திருந்து ஒரு ஸ்லோகத்தை இங்கே அனுபவிப்போம் - முதல் ஸ்லோகம்**

நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நமோ நம: /
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நமோ நம: //

நமோSசிந்த்யாத் புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்யராஸயே /
நாதாய முநயேSகாத பகவத் பக்திஸிந்தவே //

**ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீமந்நாதமுனிகளைப்பற்றி அருளியுள்ள ஒரு ஸ்லோகம் ஸ்ரீரங்கராஸ்தவம் - 5ஆம் ஸ்லோகம்**

நௌமி நாதமுநிம் நாம ஜீமுதம் பக்த்யக்விக்ரஹே /
வைராக்ய பகவத் தத்வஜ்ஞாநபக்த்யபிவர்ஷுகம் //

**ஸ்ரீமந்நாதமுனிகளை போற்றியுரைக்கும் உபதேசரத்தினமாலை 36ஆம் பாசுரம்**

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவாரார்.
அருளிச் செயலை அறிவாரார். - அருள் பெற்ற
நாதமுனி முதலாம் (முதலான) நம் தேசிகரை அல்லால்
பேதை மனமே உண்டோ பேசு.

**ஸ்ரீமந்நாதமுனிகள் அவதாரப் பெருமை**

ஸ்ரீமந்நாதமுனிகள் வீரநாராயண புரமென்கிற காட்டு மன்னார் கோயிலில் சொட்டக்குளத்தில் திருவவதரித்தார். லஷ்மீ நாதஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் என்றும் நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்! பஹுபிருசிதம் யாமுநேயப்ரந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரிதம் அகில தம: கர்ச நம் தர்ச நம்! என்றும் சொல்லுகியபடியே நாதமுனிகள் தொடங்கியே நம்முடைய ஸ்ரீவைஷ்ணவதர்சநம் ப்ரசித்தமாயிற்று. அடிகாணவியலாத இந்த ஸம்ஸாரமண்டலத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு முன்பு ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸ்ரீவைஷ்ணதர்சனமும் இருந்ததில்லை யென்று கருதலாகாது. ஸூரிய சந்திரர்களுண்டான காலம் முதலாகவே இவையுண்முண்டுதான். ஆனால் நாமறியப்பெற்றது நாதமுனிகள் தொடங்கியேயாதலால் `நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்’ என்று பணித்தார் நிகமாந்த

மஹாகுரு. `அருள்பெற்ற நாதமுனி முதலாம் நம்தேசிகரையல்லால் பேதை மனமேயுண்டோ பேசு’ என்று மாமுனிகருளிச்செய்தார். இவருடைய திருக்குமாரார் ஈச்வரபட்டாழ்வான். அவருடைய திருக்குமாரரே யமுனைத்துறைவர் - யாமுநாச்சார்யர் என்கிற ஆளவந்தார்.

## நம்மாழ்வார் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு நாலயிரம் உரைத்தல்

ஒருசமயம் திருநாரயணபுரத்திருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்து மன்னனார் ஸன்னிதியில் தங்களுக்குத் தெரிந்த ஸ்தோத்ரங்களை யெல்லாம் அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் `ஆராவமுதே அடியேனுடலம்’ என்கிற பதிகத்தை (5ஆம் பத்து 8ஆம் திருவாய்மொழி) செவிக்கினிய இசையுடனே அநுஸந்தித்தார்கள். அதில் முடிவு பாசுரத்தில் `குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்’ என்று அநுஸந்தித்ததைக்கேட்ட நாதமுனிகள், அப்படி ஆயிரம் பாசுரங்கள் அவதரித்திருப்பாதகத் தெறிகிறதே என்று நினைத்தார். அந்த ஸ்ரீவைஷ்ணவாகளை நோக்கி ஸ்வாமிகாள்! உங்களுக்கு ஆயிரம் பாசுரமும் முகபாடமாக வருமோ? என்று கேட்டார். அவர்கள் இப்பத்துப் பாசுரந்தவிர வேறொரு பாசுரமும் அறியோம் என்று சொல்லிப்போனர்கள்.

அதுமுதலாக நாதமுனிகளுக்கு இரவும் பகலும் இதே சிந்தையாய் இருந்தது. `குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்’ என்று செவிப்பட்டடியாலே அந்த சடகோபர் (நம்மாழ்வார்) திருவதரித்த குருகூரில் சென்று விசாரித்தோமாகில் அங்கே கிடைக்கக் கூடுமென்று கருதி எம்பெருமானிடத்தில் விடை பெற்று ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினார். அங்கு பொலிந்த நின்றபிரானையும் நம்வாழ்வாரையும் சேவித்து நிற்கையில் ஸ்ரீமதுரகவியாழ்வாரின் சிஷ்ய பரம்பரையில் வந்த ஒருவரான ஸ்ரீபரங்குசதாஸரென்பவர் நேர்பட, அவரைத்தெண்டனிட்டுத்தாம் எழுந்தருளின கார்யத்தை விண்ணப்பம் செய்தார். அவரிடத்தில் இவ்வாயிரமும் தெரிந்தவர்களுண்டோ? ஸ்ரீகோசமாவது உண்டோ? என்று கேட்க அதற்கு அவர் திருவாய்மொழியும் மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் பிரசாரம் மறைந்து நெடுநாளாய் விட்டது. ஆனாலும் எங்கள் குலக்கொழுந்தான ஸ்ரீமதுரகவி அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பிரபந்தமுண்டு. அதனை திருப்புளியாழ்வார் திருமுன்பே ஆழ்வார் திருவடியைச் சிந்தித்துக் கொண்டு நியமத்துடனே பன்னீராயிரம் தடவை ஜபித்தால் ஆழ்வார் அருள்புரியக்கூடுமென்று கேட்டிருந்ததுண்டு என்று கூறினார். அதுகேட்ட நாதமுனிகள் திருவுள்ளம் ஆனந்தக்கடலில் மூழ்கினமனத்தராய் அவரைத் திருவடி தொழுது ஸ்வாமிந்! அந்த கண்ணிநுன்னுசிறுத்தாம்பு பிரபந்ததத்தை அடியேனுக்கு அநுக்ரஹித்தருளவேணும் என்று விநயமுடன் வேண்ட அவரும் திருவுள்ளமுவந்து அந்தப்பிரபந்தத்தை பாடம் செய்வித்தார். இவரும் அதை அதிகரித்துத் திருபுளியாழ்வாரடியிலே நியமமுடன் பன்னீராயிரம் முறை அந்தப்பிரபந்தத்தை யநுஸந்தித்துத் தலைக்கட்னனார். இவரது பத்மாஸநோபவிஷ்டராய் அசரீரிவாணி சொல்லுவதுபோல `உமது ஆபிமதம் இன்னதென்று தெரிவிக்க வேண்டும்’ என்று சொல்ல, நாதமுனிகள் ஆனந்தக் கண்ணீர்பெருக நின்று கூப்பிய கையராய் `ஸ்வாமிந் திருவாய்மொழி முதவியதிவ்யப்ரபந்தங்களை அடியேனுக்கு ப்ராஸாதித்தருளவேணும்’ என்று விண்ணப்பஞ்செய்ய ஆழ்வாரும் பரமப்ரீதராய் அவர்க்கு திவ்யமான ஞானக்கண்ணைக் கொடுத்து ரஹஸ்யத்ரயத்தையும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்ளையும் தர்சனத்தின் ஆழ்பொருள் களையும் அஷ்டாங்க யோக ரஹஸ்யத்தையும் யோகதனசயிலே ப்ராஸிதத்தருளி அந்தர்த்தானமாயினார்.

இவ்வாறு நம்மாழ்வார் பக்கலிலே ஸர்வஸ்வமும் லபிக்கப்பெற்ற நாதமுனிகள் சிலகாலம் திருநகரியிலேயே வஸித்து வந்தார். பிறகு காட்டு மன்னார்கோயிலுக்கு

மீண்டெழுந்தருளினார். அந்த திவ்ய ப்ரபந்தங்களை சாங்கோபசாகமாக ப்ரவர்த்திப்பித்தருளினார். வடமொழிக்கு வேதவ்யாஸர் போலே தமிழ் மறைக்கு நாதமுனிகளளென்று ப்ரஸித்தமாயிற்று.
(காஞ்சீ ஸ்ரீ உவே PBA ஸ்வாமி அருளியுள்ள திருவத்யயனோத்ஸவ வைப தீபிகையிலிருந்து மேலே கூறிய வைபவம் எடுக்கப்பட்டது)

## நம்மாழ்வார் பவிஷ்யதாசார்யர் விக்ரஹத்தை நாதமுனிகளுக்கு அளித்தல்

நம்மாழ்வார் நாதனுக்கு நாலாயிர திவ்யப்ரபந்தத்தை அருளும்போது `பொலிக பொலிக பொலிக' (5ஆம் பத்து 2ஆம் திருவாய்மொழி முதல் பாசுரம்) என்கிற பாசுரத்தைக்கேட்டு ஆச்சர்யம் அடைந்த நாதமுனிகள் ஆழ்வாரிடம் `இப்படி அவதாரம் பண்ணப் போகிறவர் யார்' என்று ப்ரார்திதித்தார். ஆழ்வாரும் நாதமுனிகளிடம் பிற்காலத்தில் ஒரு மிகப்பெரிய ஆசார்யர் நம் சம்பிரதாயத்தை காப்பதற்காக ஆவதரிக்க போகிறார். அவரே இராமானுஜர் என்று சொல்லி அவரிடம் பவிஷ்யதாசார்யர் விக்ரஹத்தை கொடுத்தார். இந்த விக்ரஹம் நம் பூர்வாசார்யகளால் திருவராதனம் செய்யபட்டு இப்பொழுது ஆழ்வார்திருநகரியில் சதுர்வேதி மங்கலத்தில் உள்ளது.

## ஸ்ரீவைஷ்ணவ தர்ம நியதிகளை வரையறுத்தல்

எப்பொழுதும் ப்ரபந்தானு சந்தானத்துக்கு முன்பு திருப்பல்லாண்டு சேவிக்கவேண்டும் என்றும் திருப்பாவை, திப்பள்ளியெழுச்சி காலையில் நித்யம் சேவிக்கவேணும் என்றும் திருவாய்மொழி அனுசந்தானத்துக்கு முன்பு கண்ணிநுண்சிறுத்தாம்பு சேவிக்கவேண்டும் என்றும் நிர்ணயம் செய்தார். இப்படி ஸ்ரீவைஷ்ணவ தர்சநத்திலே அநேக ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களை நாதமுனிகள் நியமித்தார்.

## திவ்யப்ரபந்தகளுக்கு இசைவடிவு கொடுத்தல்

நாதமுனிகள் ஆழ்வார்திருநகரியில் சில காலம் தங்கியிருந்து ஆழ்வார்க்கு கைங்கர்யங்கள் செய்து வந்தார். ஒருநாள் ஸ்ரீமன்னனார் இவருடைய ஸ்வப்நத்தில் எழுந்தருளி வீரநாராயணபுரம் வந்து சேரும்படி தெரிவித்தார். ஆழ்வார் நியமனப்படியும் ஸ்ரீமன்னனார் வேண்டுகோளின்படியும் ஆழ்வார் கொடுத்தருளிய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை அதிவைபத்துடனே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வீரநாராயணபுரம் வந்து சேர்ந்தார். தம்முடைய பாகிநேயரான கீழையகத்தாழ்வானையும், மேலையகத்தாழ்வானையும், அழைத்தருளி திவ்ய ப்ரபந்தங்களை இயலுமிசையுமாக்கி த்வ்யமான கானங்களிலேயேடைத்து அவர்களுக்கு அதை பாடுவித்தருளினார். பின்னர் அருளிச் செயல்கள் ப்ரஸத்தமாயின.

ஸ்ரீரங்கத்தில் திருமங்கையாழ்வாரால் நடத்தபட்டு பிறகு நின்று போயிருந்த அத்யயநோத்ஸவாதிகளை முன்பு போலே நடைபெற ஸ்ரீமந்நாதமுனிகள் ஏற்பாடு செய்தார். திருமங்கையாழ்வார் காலத்தில் திருவாய்மொழி மட்டுமே சேவிக்கப்பட்டு வந்தது. இவர் முதல் இரண்டு ப்ரபந்தங்கைளை பகல் பத்து நாட்களிலும் திருவாய்மொழியை இரவு பத்து நாட்களிலும் தேவகானத்திலே ஏறியிட்டு மதுரகவிகளைப்போலே அபிநயத்துடனும், இயற்பா ப்ரபந்தங்களை இயலாகவும் அத்யயன உத்ஸவம் முடிந்து அடுத்த நாளிலும் சேவிக்கும்படி ஏற்படித்தினார்.

ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: